# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM
### Case No: CC. 26/2025
### Prosecution Witnesses : 1

| | | | |
|---|---|---|---|
| Name | : நல்லகுரும்பன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : கருத்தகண்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(02.07.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சாத்தங்குடியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நானும் ஆஜர் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 31.10.2024ம் தேதி இரவு 7 – 8.40 மணியளவில் எதிர் வீட்டை சார்ந்த பிரனேஷ்குமார் என்பவர் பட்டாசை கொளுத்தி போட்டதால் எனது உறவினர் ராஜலட்சுமிக்கு காயம் ஏற்பட்டது

இதனை கேட்ட அவரது அப்பா கணேசனை பிரித்குமார், பிரனேஷ்குமார் ஆகியோர்கள் கட்டையாலும் இரும்பு பிடியாலும் கீதா கற்களாலும் தாக்கியதால் எனது அக்கா கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும் ராஜலட்சுமி என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும் பின்பு நாங்கள் போலிசுக்கு தகவல் சொல்லி திருமங்கலம் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றோம் எனவும் பின்பு இது குறித்து புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கும்படி போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டு மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**.இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 26/2025**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜலட்சுமி | Caste | : |
| Father 's Name / Husband Name | : அருண்குமார் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(02.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சாத்தங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நானும் ஆஜர் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டோம். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 31.10.2024ம் தேதி இரவு 7 – 8.40 மணியளவில் எதிர் வீட்டை சார்ந்த பிரனேஷ்குமார் என்பவர் பட்டாசை கொளுத்தி போட்டதால் எனக்கு காயம் ஏற்பட்டது இதனை கேட்ட அவரது அப்பா கணேசனை பிரித்குமார், பிரனேஷ்குமார் ஆகியோர்கள் கட்டையாலும் இரும்பு பிடியாலும் கீதா கற்களாலும் தாக்கியதால் எனது அக்கா கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும்

பின்பு நாங்கள் போலிசுக்கு தகவல் சொல்லி திருமங்கலம் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றோம் எனவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டு மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**.இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 26/2025**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கணேசன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **இருளாண்டி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(02.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சாத்தங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நானும் ஆஜர் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டோம். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள 3வது கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 31.10.2024ம் தேதி இரவு 7 – 8.40 மணியளவில் எதிர் வீட்டை சார்ந்த பிரனேஷ்குமார் என்பவர் பட்டாசை கொளுத்தி போட்டதால் எனக்கு காயம் ஏற்பட்டது எனவும் இதனை கேட்ட போது என்னை பிரித்குமார், பிரனேஷ்குமார் ஆகியோர்கள் கட்டையாலும் இரும்பு பிடியாலும், கீதா கற்களாலும் தாக்கியதால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும் பின்பு நாங்கள் போலிசுக்கு தகவல் சொல்லி திருமங்கலம்

அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றோம் எனவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டு மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**.இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 26/2025**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சுவிதா** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **அழகுமலைக்கண்ணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(02.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.மாயன் என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் பணி மாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 01.11.2024ம் தேதி 9.30 மணிக்கு திருமங்கலம் தாலுகா காவல் நிலையம் சார்பு ஆய்வாளர் திரு.மாயன் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது நல்லகுரும்பன் என்பவர் அளித்த புகாரைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 212/2024 பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை**

**அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பெரியகருப்பதேவர் மற்றும் பிரபு ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 1வது எதிரியை 01.11.2024ம் தேதி இரவு 11.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். மற்ற எதிரிகள் மாண்புமிகு மதுரை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் தனியாக கைதுசெய்யவில்லை. பின்பு இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.மாயன் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்த காயச்சான்று வழங்கிய திருமங்கலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.அமலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று நகல் **அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.